


**27. 05. 2026**

தலைப்புச் செய்திகள்

1. பிரதமர் திரு. நரேந்திர மோடியை முதலமைச்சர் திரு. விஜய் புதுதில்லியில் இன்று சந்தித்து பேசுகிறார்.

2. வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகளை மேற்கொள்ள, தேர்தல் ஆணையத்திற்கு முழு அதிகாரம் உள்ளதாக உச்சநீதிமன்றம் உறுதி செய்துள்ளது.

3. பக்ரீத் பண்டிகையை ஒட்டி தலைவர்கள் இஸ்லாமிய மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

4. நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் கீழ் வீடுகள் கோரி விண்ணப்பித்த பயனாளிகளை கண்டறிய சிறப்பு குழு அமைக்கப்படும் என்று இதன் தலைவர் திரு. கு.ப. கிருஷ்ணன் கூறியுள்ளார்.

5. ஐ.பி.எல். 20-20 கிரிக்கெட் போட்டியின் எலிமினேட்டர் சுற்றில் சன் ரைசர்ஸ் ஹைதராபாத் - ராஜஸ்தான் ராயல்ஸை இன்று எதிர்கொள்கிறது.

இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

முதலமைச்சர் பயணம்

பிரதமர் திரு. நரேந்திர மோடியை முதலமைச்சர் திரு. விஜய் புதுதில்லியில் இன்று சந்தித்து பேசுகிறார்.

முன்னதாக இன்று காலை aசென்னையிலிருந்து தனி விமானம் மூலம் புறப்பட்ட முதலமைச்சர், புதுதில்லி சென்றடைந்தார்.

புதுதில்லி தமிழ்நாடு இல்லத்தில் அவரை தலைமைச் செயலர் வரவேற்ற நிலையில் காவல்துறை மரியாதையையும் அவர் ஏற்றுக்கொண்டார்.

திரு. விஜய் இன்று மாலை அவர் பிரதமரை சந்திக்க உள்ளார்.

தமிழ்நாட்டின் பல்வேறு நலத்திட்டங்கள் சார்ந்த கோரிக்கைகளை பிரதமரிடம் அவர் எடுத்துரைப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

மத்திய அமைச்சர்களையும் காங்கிரஸ் கட்சி தலைவர்களையும் அவர் சந்தித்து பேசவுள்ளார்.

இந்த பயணத்தின் போது டெல்லியில் உள்ள ஜவஹர்லால் நேரு பல்கலைகக் கழகத்தில் திருவள்ளுவர் சிலையையும் முதலமைச்சர் திறந்து வைக்கிறார்.

தமிழக முதலமைச்சராக பதவியேற்ற பின்னர் அவர் முதல்முறையாக டெல்லி செல்வது குறிப்பிடத்தக்கது.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

உச்சநீதிமன்றம்

தேர்தல் ஆணையத்தின் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகளின் செல்லுபடி தன்மையை உச்சநீதிமன்றம் இன்று உறுதி செய்தது.

இது தொடர்பான மனுக்களை விசாரித்த தலைமை நீதிபதி சூரியகாந்த், நீதிபதி ஜாய் மாலியா பக்ஷி ஆகியோர் கொண்ட அமர்வு தேர்தல் நியாயமாகவும், நேர்மையாகவும், வெளிப்படையாகவும் நடைபெறுவதை இப்பணிகள் உறுதி செய்துள்ளதாக தெரிவித்துள்ளது.

சிறப்பு தீவிர திருத்தப்பணிகள் மேற்கொள்ள தேர்தல் ஆணையத்திற்கு முழு அதிகாரம் உள்ளதாகவும் தீர்ப்பளித்துள்ளது.

40 ஆண்டுகளுக்கு முன்னர் நடைபெற்ற சிறப்பு தீவிர திருத்தப் பணிகளை தொடர்ந்து, ஏராளமான சேர்க்கை, நீக்குதல், திருத்தங்கள் நடைபெற்றுள்ள நிலையில், நகர்ப்புற மயமாக்கல், புலம்பெயர்வு போன்ற நடவடிக்கைகளால் இப்பட்டியலில், துல்லியமின்மைக்கு வாய்ப்பிருப்பதாகவும் நீதிமன்றம் சுட்டிக்காட்டியுள்ளது.

இதனடிப்படையில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் மூலம் நம்பகத்தன்மை உறுதிசெய்யப் பட்டிருப்பதாகவும் நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

பிரதமர் பதிவு

நாட்டின் பல்வேறு பகுதிகளில் வெப்பநிலை அதிகரித்து வரும் சூழலில் நாட்டு மக்கள் தங்களை பாதுகாத்துக் கொள்ள அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள பிரதமர் திரு. நரேந்திரமோடி வலியுறுத்தியுள்ளார்.

மக்கள் அதிகளவில் நீர் பருகவேண்டும் என்று சமூக வளைதளத்தில் அறிவுறுத்திய அவர், வெளியில் செல்லும் போது அனைவரும் தண்ணீர் எடுத்துச் செல்ல வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

விலங்குகள் மற்றும் பறவைகளுக்காக வீடுகளின் வெளியே, மாடி, மேற்கூரைகள், கடைகள், அலுவலகங்களில், சிறிய பாத்திரங்களில் தண்ணீரை நிரப்பி வைக்குமாறும் பிரதமர் அறிவுறுத்தியுள்ளார்.

முன்னதாக பிரதமர் மற்றொரு சமூக வலைதளப் பதிவில், தொடர் முயற்சிகள், பொறுமை, உறுதியான தீர்மானத்தின் மூலம் மிகப்பெரிய இலக்கையும் எட்ட முடியும் என்று கூறியுள்ளார்.

இந்தகைய உணர்வின் மூலம் நாட்டு மக்கள் நம்தேசத்தை புதிய உயரங்களுக்கு கொண்டு செல்வதாகவும் குறிப்பிட்டார்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

யோகா தினம்

நம்நாட்டின் தொன்மையான அறிவுத் திறனை யோகக்கலை முன்னெடுத்துச் செல்வதாக மத்திய ஆயுஷ் இணையமைச்சர் திரு. பிரதாப் ராவ் ஜாதவ் தெரிவித்துள்ளார்.

சர்வதேச யோகா தினத்திற்கு இன்னும் 25 நாட்கள் எஞ்சியுள்ள நிலையில், கஜிராஹோவில் யோகா நிகழ்ச்சியில் இன்று உரையாற்றிய அவர், முன்னெச்சரிக்கை நலவாழ்வையும், சமச்சீரான வாழ்க்கையையும் யோகா வலியுறுத்துவதாக எடுத்துரைத்தார்.

ஆரோக்கியமான முதுமைக்கு யோகா என்பதை கருப்பொருளாக கொண்டு இந்த ஆண்டு யோகாதினம் கொண்டாடப்படும் என்றார்.

நம்நாட்டின் கலாச்சாரம், பாரம்பரிய சிறப்புடன், ஆன்மீக முக்கியத்துவம் வாய்ந்த யோகக்கலை உலகளாவிய ஆரோக்கியத்தின் இயக்கமாக உருவெடுத்துள்ளது என்று பெருமிதம் தெரிவித்தார்.

கிராமங்கள், வீடுகள், பள்ளிகள், அலவலகங்கள், சமூகங்களிடையே யோகாவை கொண்டு செல்ல மத்திய அரசு தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக கூறிய அவர், பொது பங்களிப்பு மற்றும் நீடித்த மக்கள் தொடர்பு நிகழ்வுகள் மூலம் இதனை பிரபலப் படுத்துவதாகவும் எடுத்துரைத்தார்.

நலவாழ்வின் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையில் சமச்சீரான உணவு ! ஒழுக்கமான வாழ்வு ! ஒட்டுமொத்த ஆரோக்கியத்தை ! ஆயுஷ்துறை வலியுறுத்துவதாக சுட்டிக்காட்டினார்.

100 நாள் யோகா பயிற்சியில் பங்கேற்ற இரண்டு லட்சத்திற்கும் மேற்பட்டவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டதாகவும் கூறினார்.

இந்நிகழ்வின் ஒருபகுதியாக யோகா சங்கம் இணையதளத்தை மறு அறிமுகம் செய்துவைத்த அமைச்சர், யோகாவிற்கான உடையையும் அறிமுகம் செய்தார்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

பெட்ரோல், டீசல்

பெட்ரோல், டீசல் விலை இன்று மீண்டும் உயர்த்தப்பட்டுள்ளது.

பெட்ரோல் லிட்டருக்கு 33 காசுகளும்,

டீசல் 32 காசுகளும் விலை உயர்த்தப்பட்டுள்ளது.

அதேபோல் CNG கிலோ மூன்றரை ரூபாயும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து சென்னையில் ஒரு லிட்டர் பெட்ரோல் விலை 108 ரூபாய் 20 காசுகள்,

டீசல் விலை 99 ரூபாய் 98 காசுகள்,

CNG கிலோ 95 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

கடந்த 2 வாரங்களில் 6-வது முறையாக பெட்ரோல் டீசல் விலை உயர்த்தப்பட்டுள்ளது.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

ஜவஹர்லால் நேரு நினைவு தினம்

முன்னாள் பிரதமர் ஜவஹர்லால் நேருவின் 62-வது நினைவு தினம் இன்று கடைப்பிடிக்கப் படுகிறது.

அவரது நினைவிடம் அமைந்துள்ள சாந்திவனத்தில் காங்கிரஸ் கட்சித்தலைவர் திரு. மல்லிகார்ஜுன கார்கே, மக்களவை எதிர்கட்சித் தலைவர் திரு. ராகுல்காந்தி ஆகியோர் மலரஞ்சலி செலுத்தினர்.

பிரதமர் திரு. நரேந்திரமோடி தமது சமூக வலைதளப்பதிவில் அன்னாருக்கு அஞ்சலி செலுத்துவதாக குறிப்பிட்டுள்ளார்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

முதலமைச்சர் வாழ்த்து

ஈகைத் திருநாளாம் பக்ரித் பண்டிகை நாளை கொண்டாடப்படுவதை ஒட்டி இஸ்லாமிய மக்களுக்கு முதலமைச்சர் திரு. விஜய் நல்வாழ்த்துக்களை உரித்தாக்கி உள்ளார்.

ஏழைய எளிய மக்களுடன் மகிழ்ச்சியை பகிர்ந்து, சமூகத்தில் அன்பு, சமத்துவம் நிலைக்கவும், மத நல்லிணக்கம் தழைத்தோங்கவும் அவர் வாழ்த்தியுள்ளார்.

தி.மு.க. தலைவர் திரு. மு.க. ஸ்டாலினும், அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி கே. பழனிச்சாமியும் விடுத்துள்ள வாழ்த்து செய்திகளில் இஸ்லாமிய மக்களின் வாழ்வில் அமைதியும், மகிழ்ச்சியும் நிலைபெறட்டும் என கூறியுள்ளனர்.

இதனிடையே சவுதியில் பிறை தென்பட்டதை அடுத்து நாகை மாவட்டம் நாகூர் கடற்கரையில் இன்று நடைபெற்ற பக்ரீத் சிறப்பு தொழுகையில் ஆயிரக்கணக்கானோர் பிரார்த்தனை மேற்கொண்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ்..

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

ராஜேஷ் குமார்

தமிழகத்தில் உள்ள சுற்றுலாத் தளங்களை மேம்படுத்தி நாட்டிலேயே சிறந்த சுற்றுலா வசதிகள் கொண்ட மாநிலமாக மாற்ற மாநில சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. ராஜேஷ் குமார் அலுவலர்களை கேட்டுக்கொண்டார்.

சென்னையில் சுற்றுலா பயணிகளின் பாதுகாப்பு, போக்குவரத்து வசதிகளை மேம்படுத்துதல், தொழில் நுட்பங்களை பயன்படுத்துதல், சுற்றுலா நிர்வாகத்திறனை உயர்த்துதல் குறித்து அவர் ஆலோசனை மேற்கொண்டார்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

விஜயலெட்சுமி

பால் உற்பத்தியாளர்களின் நலன்சார்ந்த பணிகள் மற்றும் வெளிப்படைத்தன்மையுடன் கூடிய நிர்வாகத்தை செயல்படுத்த மாநில பால்வளத்துறை அமைச்சர் திருமதி. விஜயலெட்சுமி தெரிவித்துள்ளார்.

சென்னை தலைமைச்செயலகத்தில் பால் மற்றும் பால் பொருட்கள் விற்பனை, தூய பால் பொருட்கள் உற்பத்தி, கூட்டுறவு பால் சங்க உற்பத்தியாளர்களுக்கான நலத்திட்டங்கள் உள்ளிட்டவை குறித்து அவர் ஆய்வு மேற்கொண்டார்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

ஆதவ் அர்ஜுனா

தமிழகத்தில் திறமையான விளையாட்டு வீரர்கள் கண்டறியப்பட்டு சர்வதேச போட்டிகளில் பதக்கங்கைளை வெல்ல உதவிகள் வழங்கப்பட்டு வருவதாக மாநிலை விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. ஆதவ் அர்ஜுனா தெரிவித்துள்ளார்.

சென்னையில் செஸ் விளையாட்டு வீராங்கனை வைஷாலிக்கு 10 லட்சம் ரூபாய்க்கான காசோலையை அவர் வழங்கினார்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

கு.ப. கிருஷ்ணன்

தமிழகத்தில் நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் கீழ் வீடுகள் கோரி விண்ணப்பித்த பயனாளிகளை கண்டறிய சிறப்பு குழு அமைக்கப்படும் என்று நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டுத்தலைவர் திரு. கு. ப. கிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

திருச்சியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், இக்குழுவினர் விண்ணப்பங்களை சரிபார்த்து கணினி மூலம் ஆய்வு செய்து பரிசீலிப்பார்கள் என்றார்.

விவசாய கடன் தள்ளுபடி குறித்த கேள்விக்கு பதிலளித்த அவர், நிதி நிலைமையை சரிசெய்த பின்னர், அரசு ஒவ்வொன்றாக திட்டங்களை நிறைவேற்றும் என்றார்.

திருச்சி மாவட்டத்தில் நிலுவையில் உள்ள திட்டங்களை அமைச்சர்கள் ஆய்வு செய்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வார்கள் என்றும் அவர் கூறினார்.

.. வாய்ஸ் ...

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

நீலகிரி

நீலகிரி கோடை விழாவின் முக்கிய நிகழ்வான 66-வது பழக்கண்காட்சி குன்னூர் சிம்ஸ் பூங்காவில் இன்று தொடங்கியுள்ளது.

500 கிலோ பேரிச்சம் பழங்களை கொண்டு உருவாக்கப்பட்ட பிரம்மாண்ட டைனோசர் வடிவமைப்பு அனைவரையும் கவர்ந்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

கிரிக்கெட்

ஐ.பி.எல். 20-20 கிரிக்கெட் போட்டியில் நியூசண்டிகரில் இன்று இரவு ஏழரை மணிக்கு நடைபெறும் எலிமினேட்டர் சுற்றில் சன் ரைசர்ஸ் ஹைதராபாத் - ராஜஸ்தான் ராயல்ஸை எதிர்கொள்கிறது.

இதில் வெற்றி பெறும் அணி வரும் வெள்ளிக்கிழமை நடைபெறும் 2-வது குவாலிபயர் போட்டியில் குஜராத் டைட்டன்ஸுடன் மோதும்.

இப்போட்டியில் வெற்றிபெறும் அணி வரும் 31-ம் தேதி அஹமதாபாத்தில் நடைபெறும் இறுதி ஆட்டத்தில் ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களுருவை எதிர்கொள்ளும்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖